## “திரைக்களம் தொடங்கி அரசியல் களம் வரை – முற்போக்கு பகுத்தறிவுக் கருத்துகள் பரப்பிடும் அருமை நண்பர்”

# கலைஞானி கமல்ஹாசனுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்து!

### சமூக வலைதளத்தில் பதிவு!



**சென்னை, நவ. 9 - மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர், கலைஞானி கமல்ஹாசன் அவர்களின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், “திரைக் களம் தொடங்கி அரசியல் களம் வரை முற்போக்கு பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்புரை செய்யும் அருமை நண்பர்” என கலைஞானி கமல்ஹாசனுக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.**

முதல்வரின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

பிறக்கின்ற புதுமைகளுக்கெல்லாம் இந்தியத் திரையுலகின் வாயிற்கதவுகளைத் திறக்கின்ற கலைஞானிக்குப் பிறந்த நாள் வாழ்த்துகள்!

திரைக்களம் தொடங்கி அரசியல் களம் வரை முற்போக்கு பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்புரை செய்யும் அருமை நண்பர் மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் அவர்களின் தொண்டு சிறக்க விழைகிறேன்!

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## கோவை மாவட்டத்திற்கு

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட 6 புதிய திட்டங்கள்!

### மாவட்ட மக்கள் வரவேற்று மகிழ்ச்சி ஆரவாரம்!



**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கோவை மாவட்டத்தில் இரண்டு நாள்கள் பயணம் மேற்கொண்டு கள ஆய்வில் ஈடுபட்டார். இரண்டாம் நாளின்போது, ரூ.300 கோடியில் தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் ஆய்வகத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கோவை மாவட்ட வளர்ச்சிக்காக 6 முக்கியத் திட்டங்களை அறிவித்தார்கள். இந்த திட்டங்களை வெளியிட்ட கோவையில் சிக்ஸர் அடித்தார் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள். அந்த 6 புதிய திட்டங்கள்.**

(1) கோவையில் உள்ள குறிச்சி சிட்கோவில் தங்க நகை தொழிற்சாலை பூங்கா ஒன்று 126 கோடி ரூபாய்ச் செலவில் கட்டப்படும். இந்த பூங்காவில் சோதனை மற்றும் அளவு திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியம் (NABL) அங்கீகாரம் பெற்ற ஆய்வகம் செயல்படும். இதன் மூலம் நேரடியாக 2,000 பேருக்கும், மறைமுகமாக 1,500 பேருக்கும் வேலை கிடைக்கும்.

(2) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சென்னையில் சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்ட இராமானுஜம் தகவல் தொழில்நுட்ப நகரத்தைப் போன்றே, கோவையில், தனியார் தொழில்நுட்பநிறுவனங்களுடன் இணைந்து இந்த பெருந்திட்டம் செயல்படுத்தப்படும். சுமார் 36,000 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய வகையில், மூன்று மில்லியன் சதுரஅடி பரப்பளவில் அமைக்கப்பட உள்ள இந்த தகவல் தொழில்நுட்ப வளாகம், கோயம்புத்தூர் மாநகரத்தின் எதிர்கால வளர்ச்சியில் ஒரு புதிய மைல்கல்லாக நிச்சயம் அமையும்.

(3) அவிநாசி சாலையில் கடந்த ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்டு தொய்வாக நடைபெற்ற உப்பிலிபாளையம் முதல் சின்னியம் பாளையம் வரையிலான உயர்மட்ட மேம்பாலச் சாலை பணிகள் முடுக்கி விடப்படுவதுடன், மக்களின் கோரிக்கையை ஏற்று, சின்னியம்பாளையம் முதல் நீலாம்பூர் வரை மேலும் 5 கிலோ மீட்டர் நீளத்திற்கு சுமார் 600 கோடி ரூபாய்ச் செலவில் இந்த உயர்மட்ட மேம்பாலச் சாலை நீட்டிக்கப்படும்!

(4) தொண்டாமுத்தூர் பகுதியில் யானைகள் நடமாட்டத்தால் நிகழும் மனித - விலங்கு மோதல் சம்பவங்களைத் தடுக்கவும், பயிர்சேதங்களையும், உயிரிழப்புகளையும் தவிர்க்கவும் சுமார் 7 கோடி ரூபாய்ச் செலவில் 10 கிலோ மீட்டர் நீளத்திற்கு யானை புகாத நவீன பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படும்.

(5) கோட்டூர், வேட்டைக்காரன் புதூர், உடையகுளம் ஆகிய பேரூராட்சிகள் மற்றும் ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கும் 38 கிராமங் களுக்கு பயனளிக்கக்கூடிய கூட்டுக் குடிநீர் திட்டம் 26 கோடி ரூபாய்ச் செலவில் மேம்படுத்தப்படும். பொள்ளாச்சி வடக்கு, பொள்ளாச்சி தெற்கு மற்றும் கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் 295 கிராமங்களுக்கு குடிநீர் வழங்கக்கூடிய கூட்டுக் குடிநீர் திட்டம் 51 கோடி ரூபாய்ச் செலவில் மேம்படுத்தப்படும்.

(6) முதலமைச்சர் அவர்களின் கள ஆய்வுப் பணிகளின்போது அவரைச் சந்தித்த பல்வேறு தரப்புப் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, கோயம்புத்தூர் மாநகராட்சியில், பல ஆண்டுகளாக புதுப்பிக்க ப்படாமல் உள்ள சாலைகள், பாதாளச் சாக்கடைப் பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள சாலைகள், அதிக குடியி ருப்புகள் இருக்கக்கூடிய பகுதிகளில் உள்ள மண்சாலைகள், இவற்றையெல்லாம் தரமான தார்ச் சாலைகளாக மேம்படுத்தி, 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த அறிவிப்புகளை கோவை மாநகர மேம்பாட்டிற்காக வெளியிட்டபோது விழாவில் திரளாகக் கூடியிருந்த கோவை மாநகர பொதுமக்கள், சமூக செயற்பாட்டாளர்கள், தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் அனைவரும் வரவேற்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

---



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி, மண்டல வாரியாக நடைபெற்று வருகிறது. ஆறு மண்டலங்களைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற்று முடிந்துள்ள நிலையில், எஞ்சியுள்ள 5, 6, 9 ஆகிய மண்டலங்களுக்கு உட்பட்ட மாவட்ட – மாநகர – மாநில நிர்வாகிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி மாநில துணைச் செயலாளர்கள் முன்னிலையில், கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | மண்டலம் | இடம் |
|---|---|---|---|
| 10/11/2024 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | 5 | நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கூரப்பாளையம் பிரிவு, பெருந்துறை சாலை, பிச்சாண்டபாளையம், ஈரோடு – 638 052. |
| 10/11/2024 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | 9 | கொடி அரங்கம், குதிரைசாரிகுளம் பிரிவு, நான்கு வழிச் சாலை, திருமங்கலம், மதுரை – 625 706. |
| 11/11/2024 திங்கள்கிழமை | காலை 9.00 மணி | 6 | சந்திரா ஏ.சி. ஹால், விவேரா கிராண்ட் ஹோட்டல், பழனி சாலை, திண்டுக்கல் – 624 001. |

மண்டலம் 5, 6, 9 – ஐ சேர்ந்த மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், தவறாமல் இப்பயிற்சியில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 07-11-2024

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

---



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 7.11.2024 அன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சாரண, சாரணியர் இயக்கத்தின் 75வது நிறுவன நாள் கொடி, சிறப்பு பெருந்திரளணியின் முதல் அறிவிப்பு இதழ், இலச்சினை ஆகியவற்றை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் மாநில தலைவர் மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர்டி.ஆர்.பி. ராஜா, தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திருமதி பா.பிரியங்கா பங்கஜம் (துஞ்சாவூர்), மா.பிரதிப்குமார் (திருச்சிராப்பள்ளி) மற்றும் சாரண சாரணியர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 7.11.2024 அன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சாரண, சாரணியர் இயக்கத்தின் 75வது நிறுவன நாள் கொடி, சிறப்பு பெருந்திரளணியின் முதல் அறிவிப்பு இதழ், இலச்சினை ஆகியவற்றை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் மாநில தலைவர் மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர்டி.ஆர்.பி. ராஜா, தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திருமதி பா.பிரியங்கா பங்கஜம் (துஞ்சாவூர்), மா.பிரதிப்குமார் (திருச்சிராப்பள்ளி) மற்றும் சாரண சாரணியர்கள் கலந்து கொண்டனர்.